**செய்தி வெளியீடு எண்: 777** **நாள்: 09.11.2019**

## மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்ய இளைஞர்களுக்கு அழைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் என்னும் புதிய அலுவலகம் சென்னை - 32, கிண்டியில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இம்மையமானது இளைஞர்களுக்கு விரிவான சேவையை வழங்குவதோடு அவர்களை வேலைக்கு அமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது

இளைஞர்கள் மற்றும் வேலை நாடுபவர்களின் நலனுக்காக ஒரு சிறந்த தளத்தை உருவாக்க வேண்டி கீழ்காணும் சேவைகளை மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் வழங்கி வருகிறது.

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகளில் சில:

- உள மதிப்பீடு சோதனைகள்
- தொழில்நெறி ஆலோசகர்களால் வழங்கப்படும் உரிய ஆலோசனைகள்
- அரசுப்போட்டித் தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்
- தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள்

இதனில் தகுதியுள்ள மனுதார்களுக்கு தகுந்த தனியார்துறை வேலைவாய்ப்பினை பெற்று வழங்குதல் வேண்டி பல்வேறு புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்பினை பெற விரும்பும் வேலைநாடும் இளைஞர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இதில் பதிவு செய்யும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்கள் குறித்த விவரங்கள் அவ்வப்போது Email மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இச்சேவையை பயன்படுத்தி கொள்ள விரும்பும் மனுதாரர்கள் கீழ்கண்டGoogle Link ல் தங்களது விவரங்களை பதிவு செய்யலாம் என இயக்குநர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை மற்றும் முதன்மை செயல் அலுவலர், மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை, திரு.விஷ்ணு வேணுகோபாலன் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

https://tnvelaivaaippu.gov.in/pdf/job_seeker_details.pdf

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**